DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : STC **21/2023** |
| Deposition of Witness for | : PW4 |
| Name | : சின்னத்தாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | :02.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 02 July 2026.

**A2 எதிரி நேரில் ஆஜர். A1 எதிரி (CC/57/2024)என்ற வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வந்து தற்போது VC மூலம் ஆஜராகியுள்ளார். வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது குருவிகுளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி வேல்முருகன் எனக்குதெரியும். அவர் எனது பேரன் ஆவார். அ.சா.1 என் மகன் ஆவார். அ.சா.2 என் மருமகள் ஆவார். எதிரி மணிமண்டனை எனக்கு தெரியும் அவரும் எனது பேரன் ஆவார். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 30.11.2022–ம் தேதி காலையில் அ.சா.1 ஆடுமெய்க்க சென்றுவிட்டு மாலை 4.30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்து மாட்டு தொழுவில் நின்ற போது எதிரிகள் அ.சா.1 பார்த்து அசிங்கமாக பேசியும், எதிரி மணிகண்டன் அ.சா.1–யை அரிவாள் கம்பால் அ.சா.1–ன் இடது பக்க நெற்றியில் அடித்து காயப்படுத்தியும், எதிரி வேல்முருகன் கம்பாலும், கையாலும் அ.சா.1–யை முதுகில் அடித்து காயப்படுத்தியும், பின்பு கணேசன் மற்றும் அ.சா.2 அ.சா.1–யை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும், அ.சா.1 உள்நோயாளியாக இருந்த போது அங்கு வந்த போலிசாரிடம் மேற்படி நடந்த விபரங்களை புகார் வாக்குமூலமாக கொடுத்தார் என்றும், மேற்படி விபரங்கள் எனக்க நேரடியாக தெரியும் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது பேரன்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து விடுவிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.